# அனைத்துலக தரவரிசையில் முதலிடம் பிடித்த என்யுஎஸ், என்டியு

குறிப்பிட்ட பாடப் பிரிவுகளில் அனைத்துலக அளவிலான தர வரிசையில் முதலிடங்களைப் பிடித் துள்ளன உள்ளூர் பல்கலைக்கழ கங்கள்.

உலகப் புகழ் பெற்ற மெசாசூ செட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தைப் பின்னுக்குத் தள்ளி 'பொருள்கள் அறிவியல்' துறையில் முதலிடம் பிடித்துள்ளது நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்.

பிரிட்டனைத் தளமாகக் கொண்ட உயர்கல்வி ஆய்வு நிறு வனமான குவாக்குவாரெல்லி சைமண்ட்ஸ் (QS) இந்தத் தர வரிசையை வெளியிட்டுள்ளது.

அதேபோல, 151 போட்டியாளர் களிடையே 'பெட்ரோலியப் பொறி யியல்' துறையில் தரவரிசைப் பட் டியலின் முதலிடத்தைப் பிடித்துள் ளது சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்.

ஒட்டுமொத்த தரவரிசையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழ கம் 11வது இடத்தையும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 13வது இடத்தையும் பிடித்துள்ளன.

கடந்த ஆண்டு இவ்விரு பல் கலைக்கழகங்களும் 11வது இடத் தில் இருந்தன. இந்தப் பல்கலைக் கழகங்களின் 24 பாடப் பிரிவுகள் அனைத்துலக அளவில் தரவரிசைப் பட்டியலின் முதல் 10 இடங்களுக் குள் இருப்பதும் தெரியவந்துள்ளது.

உயர்கல்வி அமைப்பைப் பொறுத்தவரை சிங்கப்பூர் அனைத் துலக அளவில் நான்காம் இடத் தைப் பிடித்திருப்பதாகவும் இந்த ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வில் கிட்டத்தட்ட 5,000 பல்கலைக்கழகங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

கல்வி நன்மதிப்பு, தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற கல்வி, ஆசிரியர் - மாணவர் விகிதம், ஆசிரியர்களின் தகுதியுரை போன் றவை இந்த ஆய்வின் காரணி களாக இருந்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.